## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்டப் பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, முதலாம் ஆண்டு (நிகழ்நிலை) - 2021 (மீள் பரீட்சை)

## குற்றவியற் சட்டம்

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : 06

**மூன்று** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்கவும்.
(தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. இலங்கைச்சட்டம் மற்றும் இங்கிலாந்து சட்டம் ஆகியவற்றுக்கு கீழ் ஏதேனும் குற்றம் புரிவதற்கு முயன்றமைக்காக சேன என்பவன் மீது குற்றஞ்சாட்டப்பட முடியுமா எனக் காரணங்கள் கூறி விளக்குக:

(i) இசைக் கலைஞனான சேன அவனது வதிவிடத்தில் ஐந்து சிறுவர்களுடன் கண்டறியப்பட்டான். சேன அச்சிறுவர்களை பாடசாலையிலிருந்து கூட்டிச்சென்று அதேநாள் மாலையில் மீண்டும் கூட்டிவந்து விடுவானென்றும் இச்செயல் அடிக்கடி நடைபெறுவதாகவும் அச்சிறுவர்களின் பெற்றோர்கள் முறைப்பாடொன்றை செய்துள்ளதாக பொலீசார் கூறினர். பொலீசார் சேனவிற்கு எதிராக சிறுவர்களுக்கு பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற குற்றத்திற்காக குற்றஞ்சாட்ட நடவடிக்கைகளை எடுத்தனர். பிள்ளைகளுடன் கூட இருத்தல் தனக்கு விருப்பமானதென்றும் பிள்ளைகள் விருப்பத்துடனேயே தன்னுடன் வருகின்றனரெனவும் சேன வாதாடுகின்றான்.

(ii) சேன இலத்திரனியல் சாதன கடையொன்றிற்கு சென்றிருந்ததோடு அங்கு கையடக்க தொலைபேசிகளை பரிசோதித்தான். ஒருநாள் விற்பனையாளர் புதிய கையடக்க தொலைபேசியொன்றை கடையின் உட்பகுதியிலிருந்து எடுத்து மற்றொரு வாடிக்கையாளருக்கு அதனைக் காட்டியதோடு அதை பெட்டியொன்றிலிட்டு பொதிசெய்தார். சேன மெதுவாக ஒரு பெட்டியை எடுத்து தனது பாக்கெட்டினுள் இட்டுக்கொண்டான். சேன எதனையும் வாங்காதவன் போல பாவனை செய்து காசாளர் பகுதியைத் தாண்டி சென்றுகொண்டிருந்தான். அவன் நுழைவாயிலை நெருங்கும்போது சீ.சீ.டீ.வீ காணொளியினைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த பாதுகாவல் உத்தியோகஸ்தர் அவனை நிறுத்தியதோடு உடற்பரிசோதனையும் செய்தார். அவனது பாக்கெட்டில் கையடக்க தொலைபேசிக்கான பெட்டி கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் சேன அவசரமாக வெற்றுப்பெட்டியொன்றை எடுத்திருந்தமையால் அப்பெட்டியினுள் எதுவும் இருக்கவில்லை.

(iii) மோட்டார் வாகன தரிப்பிடமொன்றில் தரித்திருந்த மோட்டார் வண்டி சாவித்துளையுள் சாவியொன்றை உட்செலுத்த முயலும் போது சேன

கண்டறியப்பட்டான். சந்தேகத்தின் பேரில் பொலீசாரால் கைதுசெய்யப்பட்டதோடு விசாரணையின் போது அவனுக்கு சொந்தமாக மோட்டார் வண்டி எதுவும் இல்லையென்பதும் அவனது உடமையில் மோட்டார் வண்டி சாவிகளின் கொத்தொன்று இருந்ததென்பதும் தெரியவந்தது. அவன் மோட்டார் வண்டியொன்றை திருட முயன்ற குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டான்.

[30 + 30 + 40 = 100 புள்ளிகள்]

2. அஜித் என்பவன் அனு என்பவளுடன் முகப்புத்தகம் வாயிலாக நண்பனாகினான். அவர்களிருவரும் ஓர் நாள் சந்திப்பதற்கும் சுற்றுலா ஒன்றிற்கு செல்வதற்கும் திட்டமிட்டனர். அனுவின் சகோதரனான அருண், அனுவின் செயற்பாடுகளைக் கண்டு சந்தேகப்பட்டதோடு அவளைப் பின்தொடர்ந்தான். வெளிமாகாண பேரூந்தொன்றில் அஜித்தடன் அனு ஏறுவதற்கு முயன்றதை அருண் கண்டபோது அவன் அஜித்தை எதிர்த்தான். கடுமையான கைக்கலப்பின் போது அருண் அஜித்தைத் தள்ளிவிட்டதோடு அஜித் மிதிப்பலகையில் தலை அடிப்பட விழுந்தான். அவசரமாக அஜித் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதோடு அவனுக்கு முதலுதவி வழங்கப்பட்டு கோவிட்-19 இற்கான ஒரு துரித எதிர்-நுண்ணனு பரிசோதனை (Rapid Antigen Test) செய்யப்பட்டது. அஜித்துக்கு கோவிட்-19 இருப்பது உறுதி செய்யப்பட்டதனால் அவன் கோவிட்-19 பிரிவிற்கு அனுப்பப்பட்டு அங்கு அவனின் கோவிட்-19 தொற்றிற்கு சிகிச்சையளிக்கப்பட்டபோதும் தலைக் காயங்கள் தொடர்பில் கவனிக்கப்படவில்லை. தலைக் காயங்கள் கிருமித்தொற்றுக்கு உள்ளாகியமையால் நான்கு தினங்கள் கழித்து அஜித் இறந்தான். அதேசமயம் சம்பவ வேனையில் அருண் தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களால் போதைக்குள்ளாகியிருந்தமை பொலிஸ் விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டது.

பொருத்தமான ஆதாரங்கள் மற்றும் வழக்குச் சட்டங்களின் மேற்கோளுடன் அருணின் குற்றவியல் பொறுப்படைமை குறித்து ஆராய்க.

[100 புள்ளிகள்]

3. (i) பின்வருஞ் சந்தர்ப்பங்களில் மகேஸிற்கு எதிர்க்காப்புக்கள் ஏதேனும் உள்ளதா என்பதை நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் வழக்குச் சட்டம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க:

(a) கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த வேளையில் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த மகேஸினை பொலீசார் நிறுத்தினர். அரைமணி நேரத்தில் உணவை கையளிக்காவிடில் அவனது தொழில்தருனரிற்கு அறிவிப்பதாக அச்சுறுத்திய ஒரு வாடிக்கையாளருக்கு உணவை கையளிப்பதற்காகவே செல்லுவதாக மகேஸ் கூறினான். தனது தொழிலை இழக்காமலிருக்கும் பொருட்டுதான் அடிபணிந்ததாக மகேஸ் கூறுகின்றான்.

[25 புள்ளிகள்]

(b)மகேஸ் நள்ளிரவில் ஏற்பட்ட சத்தமொன்றினால் நித்திரை கலைந்து எழுந்ததோடு torch light ஒன்றை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான். அவன் தனது கோழிப்பண்ணை கூண்டருகில் ஒரு அந்நியன் நின்றுகொண்டிருப்பதை கண்டான். அவன் torch light இனை எறிந்ததோடு அதன் விளைவாக அவ் அந்நியனுக்கு தலையில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

[25 புள்ளிகள்]

(ii) இலங்கையில் பாலியல் வன்புணர்வு வழக்குகளில் ''சான்றொப்பமளித்தல்'' எனும் அம்சம் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றது என்பதை விளக்குக.

[50 புள்ளிகள்]

4. பின்வரும் சந்தர்ப்பங்களில் கமல் என்பவனால் குற்றங்கள் எவையேனும் புரியப்பட்டுள்ளனவா என ஆராய்க். பொருத்தமான அதிகாரங்களை எடுத்துக்காட்டி விடைக்கான காரணங்களைக் கூறுமாறு நீர் தேவைப்படுத்தப்பட்டுள்ளீர்:

(i) கமல் தனது வசிப்பிடத்திற்கண்மையிலுள்ள பாதையின் ஓரமாக துவிச்சக்கரவண்டியொன்று இருப்பதைக் கண்டான். அது கைவிடப்பட்டதென எண்ணி அதனை அவன் வீட்டிற்கு எடுத்து வந்து பயன்படுத்தலானான். உண்மையில் அத்துவிச்சக்கரவண்டி அதே பிரதேசத்தில் வாழ்கின்ற சுனில் என்பவனுக்கு சொந்தமானதென்பதோடு சுனில் கோவிட்-19 சிகச்சை நிலையத்திற்கு புறப்படும் அவசரத்தில் அதனை பாதையோரமாக விட்டு சென்றிருந்தான்.

(ii) கமல் மாதாந்தம் ரூ.50,000/- இனை சம்பளமாக அவனது தொழிற்தருனரிடமிருந்து பெற்றுக் கொண்டதோடு ஒவ்வொரு மாத இறுதி தினத்திலும் அப்பணம் அவனது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் வந்துது. செப்டம்பர் 30 ம் திகதியன்று அவனது தொழிற்தருனரின் கணக்காளரது தவறுதலின் காரணமாக அவனது வங்கிக் கணக்கில் ரூ.60,000/- வரவு வைக்கப்பட்டது. கமல் முழுப்பணத்தையும் செலவு செய்தான்.

(iii) கமல் சுமதி என்பவளுக்கு தொலைபேசியினூடாக தொடர்பு கொண்டு சுமதி ஒரு ஆணுடன் ஒன்றாக இருக்கும் புகைப்படமொன்றை அவளது பெற்றோருக்கு அனுப்பாமலிருப்பதற்காக ஐந்து இலட்சம் ரூபா தருமாறு கோரினான். சுமதி ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஆபரணங்களை அவனுக்கு வழங்கியதோடு கமலின் தொலைபேசியிலுள்ள அவளது அனைத்து புகைப்படங்களையும் அழித்து விடுமாறு அவனிடம் கோரினாள். கமல் அவ்வாறு செய்ய உடன்படாததோடு அதன் விளைவாக அவர்களுக்கிடையில் கைக்கலப்பொன்று ஆரம்பித்தது. கமல் சுமதியின் கழுத்தை நெரித்து அவளை தள்ளிவிட்டு அவ்விடத்திலிருந்து தப்பியோடினான்.

(iv) கமல் 5 அசல் *Hp* வர்த்தகக் குறியீட்டையுடைய கணினிகளையும் 5 தரம் குறைந்த கணினிகளையும் கொள்வனவு செய்தான். அவன் அசல் வர்த்தகக் குறியீட்டையுடைய கணினிகளை *Hp* பெட்டியிலிருந்து எடுத்து அவற்றினுள் தரம் குறைந்த கணினிகளை வைத்ததோடு அவற்றை சுதத் என்பவனுக்கு அசல் கணினிகளின் விலைக்கு விற்றான்.

[25 X 4 + 100 புள்ளிகள்]

5. ''கடும் பொறுப்பு கோட்பாட்டின் அங்கீகரிப்பானது குற்றவியல் நீதிமுறையில் அநீதியின் முக்கிய பாகமாக அமைகின்றது''.

   மேற்போந்த கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கை மற்றும் இங்கிலாந்தில் காணப்படுகின்றதான நியதிசட்ட வாசகங்கள் மற்றும் வழக்குச் சட்ட ஆதாரங்களை எடுத்துக்காட்டி உமது விடைக்கான காரணங்களைக் கூறுக.

   [100 புள்ளிகள்]

6. குடிப்பழக்கமற்ற விஜய என்பவன் நகரத்திலுள்ள கழகமொன்றில் நடைபெறவுள்ள விருந்துபசாரத்தில் பங்கேற்க அவனது நண்பர்களால் அழைக்கப்பட்டிருந்தான். விஜய மென்மையான மதுசாரத்துடனான (light alcohol) குடிபானமொன்றை கோரினான். விஜய மதுபானங்கள் அருந்தமாட்டான் என அறிந்திருந்த அவனது நண்பர்கள் அவனது குடிபானத்தில் மதுபானத்தை வேண்டுமென்றே கலந்தனர். அப்பானத்தின் மூன்றாவது கோப்பையை அருந்திக்கொண்டிருந்த வேளையில் அக்கழகத்திற்கு வந்திருந்த மற்றுமொரு வாடிக்கையாளர் தவறுதலாக விஜயவின் சட்டையின் மீது மதுபானத்தை கொட்டிவிட்டதோடு விஜயவை நோக்கி சத்தமிட ஆரம்பித்தார். தனது கோபத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியை இழந்த விஜய நீண்ட இரும்புக் கால்களையுடைய stool ஒன்றினால் அவரை அடித்ததோடு அதனால் அவருக்கு கடுங்காயங்கள் ஏற்பட்டது. தாக்குதலில் தலையிலேற்பட்ட காயங்களின் காரணமாக அவருக்கு அறுவை சிகிற்சையான்று மேற்கொள்ளப்பட்டது. சண்டையை நிறுத்த முயன்ற கடமையிலிருந்த பணியாள் ஒருவரையும் விஜய தள்ளிவிட்டான்.

   இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை எடுத்துக்காட்டி விஜயவின் குற்றவியல் பொறுப்புடைமையை விளக்குக.

   [100 புள்ளிகள்]

*

s